இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 21 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 14 – வெள்ளிக்கிழமை 30 ஆகஸ்டு 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 21: Thiruvalluvar Year - 2055 - Aavani 14 - Friday 30 August 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00






தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு அமெரிக்கா சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சான்பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் அமெரிக்க நாட்டின் சான்பிரான்சிஸ் கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். திருமதி. துர்கா ஸ்டாலின் உடனுள்ளார்.

## அமெரிக்காவின் - சான்பிரான்சிஸ்கோ நகருக்குச் சென்றார்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு!

## தொழில் முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்று முதல்வர் உரை நிகழ்த்தினார் !

**சான்பிரான்சிஸ்கோ, ஆக. 30-**

**தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கா பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரை நேற்று சென்றடைந்தார்.**

விமான நிலையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் நேரில் சென்று உற்சாகம் மேலிட வரவேற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சான்பிரான்சிஸ்கோ நகரில் நேற்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதும் மாநிலத்தின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில், தமிழ்நாடு அரசு பல்வேறு முக்கியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு லட்சம் கோடி அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்து அதற்கான பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசு முறைப் பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்கா பயணம் மேற்கொண்டுள்ளார்.



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு அமெரிக்கா சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சான்பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் அமெரிக்க நாட்டின் சான்பிரான்சிஸ் கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர். திருமதி. துர்கா ஸ்டாலின் உடனுள்ளார்.

சென்னையில் இருந்து சான்பிரான்சிஸ்கோ சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது. தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் பல்வேறு இசை வாத்தியங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அமெரிக்கா சென்றுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார். நாளை அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து கலந்துரையாடுகிறார்.

சான்பிரான்சிஸ்கோவில் இருந்து செப்டம்பர் 2 ஆம் தேதி சிகாகோ நகருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பயணம் மேற்கொள்கிறார். அங்கு பல்வேறு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் முதலீட்டாளர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறார். செப்டம்பர் 7 ஆம் தேதி சிகாகோவில் தமிழர்களுடனான மாபெரும் சந்திப்பு நிகழ்ச்சியிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார். செப்டம்பர் 14 ஆம் தேதி சென்னை திரும்பும் வகையில் முதலமைச்சரின் பயணத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**சிகாகோவுக்கு வரும் முதல்வருக்கு வரவேற்பு!**

இதனிடையே செப்டம்பர் 2 ஆம் தேதி சிகாகோ வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்க அங்குள்ள தமிழர்கள் தயாராகி வருகின்றனர். தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்க சிகாகோ தமிழ்ச் சங்கம் சார்பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக முதலமைச்சரை வரவேற்க தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்ட பொன் பறை இசைக்குழுவினர் நடனம் ஆடியும், பறை இசைத்தும் ஒத்திகை நிகழ்ச்சியில் ஈடுபட்டனர்.

மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

---

### மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து

# தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்துகிறது!

## ஒன்றிய அரசின் தரவுத் தளம் தகவல்!

*புதுடெல்லி, ஆக. 30 -*

*கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான வேலைவாய்ப்பு வழங்கும் விதமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் கடந்த 2005ம் ஆண்டு ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டது.*

*எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தரவு தளம், கடந்த நிதி ஆண்டில் (2023-2024) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் பெண்களின் பங்கேற்பு தொடர்பாக மாநிலங்கள் வாரியான விவரத்தை வெளியிட்டுள்ளது.*

*அதில், 86.66 சதவீதம் பெற்று தமிழகம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.*

*இதில் மிகவும் குறைவாக ஜம்மு காஷ்மீர் 32.16 சதவீத பங்களிப்பு மட்டுமே கொடுத்திருக்கிறது.*

*கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் கோவா ஆகிய 4 மாநிலங்கள் மட்டுமே 70 சதவீதத்துக்கு அதிகமான பெண்களின் பங்கேற்பினை தந்திருக்கின்றன.*

*50 முதல் 70 சதவீத பங்களிப்பினை 16 மாநிலங்களும், 50 சதவீதத்துக்குக் குறைவான பங்களிப்பினை 14 மாநிலங்களும் வழங்கியிருக்கின்றன.*

---

### ஜன்தன் யோஜனா திட்டம் :

# ஐ.மு.கூட்டணி அரசின் திட்டத்தை பா.ஜ. காப்பி அடித்து விளம்பரம் செய்கிறது!

## காங்கிரஸ் கடும் விமர்சனம்!

புதுடெல்லி, ஆக.30–

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கொண்டு வந்த திட்டத்தை பா.ஜ. காப்பி அடித்து, அதற்கு விளம்பரம் செய்து கொள்கிறது என காங்கிரஸ் கடுமையாக சாடி உள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே தன் எக்ஸ் பதிவில், “2011ம் ஆண்டில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஸ்வாபிமான் என்ற பெரிய நிதிச்சேர்க்கை திட்டத்தை கொண்டு வந்தது. இது 2012ம் ஆண்டில் நோ பிரில்ஸ் அக்கவுன்ட்ஸ் (அடிப்படை சேமிப்பு கணக்கு) என்ற அரசு பெயரை பெற்றது. 2013ம் ஆண்டில் நிதிச்சேர்க்கை திட்டத்தை 2016 வரை நீட்டிக்க வங்கிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

பின்னர் இந்த நிதிச்சேர்க்கை திட்டம் மோடி அரசால் ஜன்தன் யோஜனா என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2013ம் ஆண்டிலேயே ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நேரடி பலன் பரிமாற்ற (டிபிடி) திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது 291 மாவட்டங்களில் எல்பிஜி மானியம் வழங்க ஆதாருடன் இணைக்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பா.ஜ. ஆளும் மாநிலங்கள் இதை எதிர்த்தன. மோடியும் இதை எதிர்த்தார். இன்று அதே திட்டங்களை பெயர் மாற்றி அறிவித்து, அதனை விளம்பரப் படுத்துவதில் பிரதமர் மோடி பிசியாக இருக்கிறார் என காட்டமாக பதிவிட்டுள்ளார்.

மேலும் கார்கே தன் எக்ஸ் பதிவில், “மோடி அரசு வங்கிகளை பொதுமக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் கருவியாக மாற்றி உள்ளது. காங்கிரசின் 3 கேள்விகள் : 1. 10 கோடிக்கும் அதிகமான ஜன் தன் வங்கி கணக்குகள் மூடப்பட்டுள்ளன என்பது உண்மையல்லவா? அதில் சுமார் 50% கணக்குகள் பெண்களின் கணக்குகள் அல்லவா? அந்த கணக்குகளில் டிசம்பர் 2023 வரை ரூ.12,779 கோடி டெபாசிட்கள் இருந்தன. மொத்த ஜன்தன் கணக்குகளில் 20% மூடப்பட்டதற்கு யார் பொறுப்பு?

கடந்த 9 ஆண்டுகளில் ஜன் தன் கணக்குகளின் இருப்பு ரூ.5,000க்கும் குறைவாகவே உள்ளது. சராசரி ரூ.4,325 என்பது உண்மையல்லவா? பா.ஜ. ஆட்சியின் அதிகரிக்கும் பணவீக்கத்துக்கு மத்தியில் இந்த சிறிய பணத்தை வைத்து கொண்டு ஒரு ஏழை எப்படி வாழ முடியும்? பொது கணக்குகள் மற்றும் ஜன்தன் கணக்குகளை இணைத்து, 2018 முதல் 2024 வரை கூடுதல் ஏடிஎம் பரிவர்த்தனைகள், குறைந்தபட்ச இருப்பு தொகை வைக்கவில்லை என்ற தகவல்களை குறுஞ்செய்தி அனுப்பி மோடி அரசு ரூ.43,500 கோடி கொள்ளையடித்துள்ளது உண்மையல்லவா? என அடுக்கடுக்காக கேள்வி எழுப்பி உள்ளார்.